1975 மார்ச் 25]

கூட்டுறவு அரிசி ஆலை, தூத்துக்குடி.

*454. வினா—திரு. இரா. இராமலிங்கம்: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் உள்ள நெல்லை மாவட்டக் கூட்டுறவு விற்பனை விநியோக சங்கத்திற்கு அரிசி ஆலை சொந்தமாக உள்ளதா?

(இ) ஆம் எனில், இந்த ஆண்டில் (1974) எத்தனை நாட்கள் ஓடியிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) 1974-ம் ஆண்டில் 106 நாட்களுக்கு அரிசி ஆலை செயல்பட்டுள்ளது.

திரு. மு. இரத்தினசபாபதி: தலைவரவர்களே, இந்த அரிசி ஆலை எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது? ஆரம்பித்ததிலிருந்து எந்த ஆண்டிலாவது அது தனது முழுத் திறன் அளவையும் பயன்படுத்தி அரிசி அரைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சிவில் சப்ளைஸ் இலாகாவிலிருந்து நெல் கொடுக்கும்போதெல்லாம் அதிக அளவுக்கு அரைக்கப்பட்டிருக்கிறது. 1967–68, 1968–69, 1969–70—அதற்குப் பின்னாலே குறைவாக இருக்கிறது. இப்பொழுது மறுபடியும் அதிக அளவுக்கு நெல் கொடுக்கப்பட்டு, அரைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

THIRU N. K. PALANISAMI: The question is about the number of days this unit has worked during the year 1974.

அதற்கு கனம் அமைச்சரவர்கள் பதில் சொல்லவில்லை. ஆலை எத்தனை நாள் அரைத்தது? இது மாதிரி பல ஆலைகள் இருக்கின்றன. அது சரியான முறையிலே நடக்கவில்லை. இப்பொழுது 3, 4 மாதங்களாகத் தான் ஓடுகிறது. சர்க்காரே இந்த மாதிரி முறையிலிருந்தால் சரியா சர்க்கார் போதுமான அளவு அரைத்து, கோவாப்பரேடிவ் ஸ்டோர்களுக்கு சப்ளை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 106 நாட்கள் என்று ஏற்கெனவே சொன்னேன். நாம் அதிகமாக புரக்யூர்மெண்ட் செய்து—கொள்முதல் செய்து—அரசாங்கம் நெல்லைக் கொடுக்கும்போது, இந்த ஆலைகள் நன்றாக நடைபெறுகின்றன. இப்பொழுது மறுபடியும் கொடுக்கத் தொடங்கியிருக்கிறோம்.